முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 122/2013

இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.2 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அன்புதேவி | தொழில் | : தக்கார் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : பெரியசாமி | கிராமம் | : – |
| வயது | : 34 | தாலூக்கா | : திருப்பூர் தெற்கு வட்டம் |
| நாள் | : 19–08–2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் இந்து அறநிலையத் துறையில் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். 3 ம் பிரதிவாதியின் அறங்காவலர் ஜெகநாதன் என்பவருக்காக நான் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அதற்காக அதிகார ஆவணம் எதுவும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஜெகநாதன் தான் கோவிலின் அறங்காவலர் என்பதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 3 ம் பிரதிவாதியின் அறங்காவலர் தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரவேண்டும் அவருக்கு பிரதிநிதியாக வர எனக்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல. தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். முத்தனம்பாளையம் கிராமம் காலை எண் 50 ல் 6.50 ஏக்கரில் 5 ல் 1 பாகம் நாச்சியப்ப கவுண்டருக்கு பாத்தியம் என்றால் அந்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேன். நாச்சியப்ப கவுண்டர் தனது சொத்தை சோமசுந்தரக் கவுண்டருக்கு அடமானம் வைத்த அடமானத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

3) நாச்சியப்ப கவுண்டர் கடன் தொகையை செலுத்தாததால் சோமசுந்தரம் அ.வ.எண்.441/1938 என்ற வழக்கை திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அந்த வழக்கில் தீர்ப்பு பெற்று மேற்படி கடனுக்காக தாவா சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து அதனை சோமசுந்தரம் செட்டியார் என்பவருக்காக ஆறுமுகம் என்ற வழக்கறிஞர் ஏலத்தில் எடுத்தார் என்றால் அந்த ஆவணங்களை பார்த்தேன். அது நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள மேற்படி சோமசுந்தரம் செட்டியார் ஏலச் சான்று பெற்று அனுபவம் பெற்று மேற்படி சோமசுந்தரம் செட்டியார் வாதியின் தாயார் நஞ்சம்மாள் என்பவருக்கு 14.09.1942ம் தேதியிட்ட கிரய ஆவணம் 4562/1942 ன்படி கிரயம் கொடுத்தார் என்றால் அந்த கிரய ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். பிறகு மேற்படி நஞ்சம்மாள் இதர பாகஸ்தர்களுடன் பாகக்கறார் செய்தார் என்றால் அந்த ஆவணத்தை பார்த்துள்ளேன். அந்த பாகக்கறாரின்படி நஞ்சம்மாளுக்கு காலை எண் 50ல் 2.17 ஏக்கர் பாத்தியமானது என்றால் ஆவணத்தை பார்த்துள்ளேன்.

4) காலை எண் 50 இனாம் காலை என்பதால் கோபி செட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் விசாரணை செய்தார். எஸ்.ஆர்.எண்.221/68/எம்.ஐ. ஆக்ட் படி கோபி செட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் நஞ்சம்மாளுக்கு பட்டா கொடுக்கவில்லை என்றால் கோவிலுக்கு கொடுத்தார். அந்த உத்தரவை எதிர்த்து நஞ்சம்மாள் சி.எம்.ஏ.429/1969 என்ற மேல்முறையீட்டு மனுவை இனாம் தீர்ப்பாயம் மற்றும் கோவை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் ஆவணத்தை பார்த்துள்ளேன். அந்த மனுவில் கோபி செட்டிபாளையம் செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு, நஞ்சம்மாளுக்கு ரயத்துவாரி பட்டா கொடுக்க வேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான். ஆனால் நிபந்தனையின் அடிப்படையில் 87 செண்ட்க்கு பட்டா கொடுக்க உத்தரவாகி உள்ளது.

5) கொண்டத்துக் கவுண்டர் என்பவர் 87 செண்ட் வேண்டும் என தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு, நஞ்சம்மாளுக்கு 2.17 ஏக்கருக்கு ரயத்துவாரி பட்டா

வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. சி.எம்.ஏ.429/1969 மனுவின் உத்தரவுக்கு எதிராக நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோமா என்றால் இல்லை. காலை எண் 50ல் உள்ள இதர பாகஸ்தர்கள் ஈஸ்வரி மற்றும் மூவர் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.285/2015 என்ற வழக்கை வீரராகவ பெருமாள் கோவிலுக்கு எதிராக தாக்கல் செய்து அந்த வழக்கில் இதர பாகஸ்தர்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். **அ.வ.எண்.285/2015 ன் தீர்ப்பாணை வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த உத்தரவின் பேரில் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேல்முறையீட்டு எண்ணாகவில்லை. நாங்கள் மேல்முறையீடே தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம்.

6) சி.எம்.ஏ.429/1969 மனுவின் உத்தரவின்படி நஞ்சம்மாளுக்கு சொத்து பாத்தியம் என்றால் சரியல்ல. நஞ்சம்மாளுக்கு 3 மகன்களும் 1 மகளும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நஞ்சம்மாள் இறந்த பிறகு அவரின் கணவரும் இறந்து விட்டார் என்றால் சரிதான். நஞ்சம்மாளின் ஒரு மகன் தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். நஞ்சம்மாளின் மற்ற வாரிசுகளான 2 மகன்களும் ஒரு மகளும் வாய்மொழியாக பாகம் செய்து தாவாச் சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

7) ஷேசாத்திரி என்பவருக்கு ஸ்தானிகம் என்ற நிலையில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூல விவரங்கள் தவறானது எந்த விவரமும் படிக்காது தவறான விவரங்களை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கோவிலுக்கு தாவாச் சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சி.எம்.ஏ.429/1969 மனுவின் உத்தரவின்படி அனைத்து உரிமைகளும் கோவிலை விட்டு போய்விட்டது என்றால் சரியல்ல.

8) சி.எம்.ஏ.3/2019 என்ற மனுவில் வாதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் தீர்ப்பானது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. காலை எண் 50ல் 6.50 ஏக்கர் காலை எண் 50/2ல் 5.63 ஏக்கர் கோவிலுக்கு பாத்தியமாகும்.

சி.எம்.ஏ.3/2019 என்ற மனுவில் சி.எம்.ஏ.429/1969 மனு பற்றிய விவரங்களை சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. பொய்யான விவரங்களை அளித்து சி.எம்.ஏ.429/1969 மனுவின் உத்தரவை மறைத்து சி.எம்.ஏ.3/2019 என்ற மனுவில் உத்தரவு பெறப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவானது இந்த வழக்கின் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

9) நான் எந்த ஆவணங்களையும் படித்துப் பார்க்காமல், எந்த விவரமும் தெரிந்து கொள்ளாமலும், வாக்கு கோப்புகளை படித்துப் பார்க்காமலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து வாதிக்கு பாத்தியம் என்றாலும் தாவாவில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.